**World Tamil Christian Fellowship**
**60, High Worple, Rayners Lane, Harrow**
Middlesex, HA2 9SZ, United Kingdom
Tel: +44 208 429 9292
www.wcflondon.com
wcflondon@gmail.com

# நோக்கம் : உங்களுடைய ஓட்டம்

***வேதாகமத்தை வாசித்தலானது, தங்களுடைய ஓட்டத்தை நன்றாய் ஓடிமுடித்த நபர்களை நீங்கள் சந்திக்கவும் அவர்களுக்கு வாழ்த்துரைக்கவும் உங்களுக்கு உதவி செய்கிறது!***

**நீங்கள் தனித்துவமானவர்கள் என்பதோடு உங்களுக்கு ஓடுவதற்கு ஒரு ஓட்டப்பந்தயம் உண்டு!**

நாம் நோக்கம் என்ற தலைப்பிலுள்ள அநேக விடயங்களை பார்த்தோம். அவை

- நீங்கள் தேவனுடைய குடும்பத்திற்கு சொந்தமாகுவதற்கு அழைக்கப்பட்டு இருக்கிறீர்கள்.
- நீங்கள் அவருடைய அன்பினாலே அவருடைய குடும்பத்திற்குள் கொண்டுவரப்பட்டு இருக்கிறீர்கள்.
- நீங்கள் தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைப் போலாகுவதற்கு அழைக்கப்பட்டு இருக்கிறீர்கள்.
- நீங்கள் உங்கள் முழு வாழ்க்கையிலும் அவரை நமஸ்கரிப்பதற்காகவே உருவாக்கப்பட்டு இருக்கிறீர்கள்.
- உங்களுக்கு ஒரு நோக்கம் (திருத்தூதுப்பணி) இருக்கிறது.

இப்போது, *உங்களுடைய ஓட்டம்* என்ன என்பதை பார்ப்போம்!

> *அன்றியும், **அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்** தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறான வராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் **தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு** முன்குறித்திருக்கிறார்.* ரோமர் 8:28-29

நாம் புரிந்துகொள்ளும் வகையில் வேதாகமம் விஸ்தாரமான உருவணியை உபயோகிக்கின்றது. அதன் காரணமாக ஓட்டப்பந்தயத்தில் ஓடுவதே மிகமுக்கியமான ஒன்றாகும்.



ஆகவே, ஓட்டப்பந்தயம் என்றவுடனே உங்கள் சிந்தனைக்கு வருவது என்ன?

- வேகம்
- நேரம்
- பெலன் (திடகாத்திரம்)
- உபகரணம்

தெளிவான பதில், இதில் பிழை எதுவும் இல்லை என உங்களில் சிலர் சொல்லக்கூடும். எப்படியாயினும் மிக முக்கியமான பிரமாணமானது ஓட்டத்தை முடிப்பதற்கான உறுதி ஆகும்.

*'Forest Gump'* போரஸ்ட் கம்ப் என்னும் திரைப்படமானது ஒரு ஓட்டவீரர் பற்றியதாகும். வித்தியாசமான ஜனங்கள் வேறுபட்ட காரணங்களுக்காக ஓடுகிறார்கள். ஒருவேளை உங்களில் சிலர் ஓடுகிறவர்களாக இருக்கலாம். நீங்கள் ஆரோக்கியத்திற்காக ஓடுகிறவராக அல்லது உங்கள் உடல் பருமனை குறைப்பதற்காக ஓடுகிறவராக அல்லது மெலிந்த அழகிய உடலமைப்பை பெறுவதற்காக ஓடுபவராக அல்லது ஓடுவதற்கு சாதாரணமாக விருப்பமுள்ளவராக இருக்கலாம். போரஸ்ட் கம்ப் என்பவர் தொழிலாகவும், பதக்கங்களை வெல்வதற்காகவும், பணத்திற்காகவும், புகழுக்காகவும் ஓடினார். எப்படியாயினும்

அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்தவ வாழ்க்கையை ஓட்டப்பந்தய ஓட்டம் என ஒப்பிடுகிறார். அவர் அப்படி சொல்வது ஏன் எனப் பார்ப்போம். “ஓட்டம்” என்ற வார்த்தையானது கிரேக்க மொழியில் ஸ்டேடியன் என்று அழைக்கப்படுகிறது. அப்போஸ்தலர் பவுல் இந்த வார்த்தையை உபயோகிக்கும் போது, அது நம்முடைய விசுவாசத்தின் ஓட்டத்தை குறிப்பதுடன் அதனை எங்களுக்கு முன்பாக சென்று கண்காணித்துக் கொண்டிருப்பவர்கள், மிகுந்த ஆவலோடு தடுப்பு தடைகளை தாண்டி நாம் அதனை நிறைவு செய்வதை கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள். – எமது போராட்டங்கள், சந்தேகங்கள், பயங்கள்!

இந்த கிறிஸ்தவ ஓட்டத்தின் சிறப்பம்சம் என்னவெனில், இது 100 மீட்டரோ, 10,000 மீட்டரோ அல்ல, ஆனால் மரதன் ஓட்டத்தைப் போன்றது – வாழ்க்கை முழுதிற்குமான மரதன் ஓட்டம். ஓட்டத்தை நன்றாக ஆரம்பித்ததற்காக இங்கே யாரும் பரிசுகளையோ வெகுமதிகளையோ பெறமுடியாது. அது ஓட்டத்தை சரியான ஒழுங்கில் நிறைவுசெய்தவர்களுக்காகவே வைக்கப்பட்டிருக்கிறது.

நான் முன்பே தெரிவித்தது போல மேலும் நாம் பார்ப்பதற்கு முன்னர் அநேக மக்கள் தங்களுடைய சுய ஓட்டத்தை ஓடி சுய நீதியை காண்பிக்க நினைத்ததால் தங்கள் ஓட்டத்தை தவறி யிருக்கிறார்கள். அவர்களைப் போலல்லாது, தேவனால் அழைக்கப்பட்ட நாம் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டவர்களாய் தேவனை மகிமைப்படுத்துவதற்காக எமது ஓட்டத்தை ஓட வேண்டும்.

இதோ ஒரு நல்ல செய்தி!

> *இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்.* 2 தீமோத்தேயு 4:8

நீங்கள் கேட்டது சரியே! தங்களுடைய ஓட்டத்தை சரியாய் முடித்தவர்கள் அந்த உன்னத நாளிலே தங்களுடைய கிரீடத்தை பெற்றுக்கொள்வார்கள்.

இப்போது நாம் மரதனிற்கு வருவோம்!

## 1. உங்களைப் போலவே உங்கள் ஓட்டமும் தனித்துவமானது

உங்களைப்போலவே, உங்கள் ஓட்டமும் தனித்துவமானதுடன் அது உங்களைத்தவிர வேறு யாராலும் ஓட முடியாதது ஆகும்.

> *''ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்.''* எபிரேயர் 12:1

இந்த ஓட்டமானது நீங்கள் இயேசுவை உங்கள் வாழ்க்கையில் தேவனாக ஏற்றுக்கொண்ட நொடியில் ஆரம்பித்து, அது இந்த பூமியில் உங்கள் கடைசி மூச்சு இருக்கும்வரையில் முடிகிறது. இந்த ஓட்டமானது உங்களுக்கென விசேஷமாய் வடிவமைக்கப்பட்டது. ஆகவே நீங்கள் எப்போதும் மற்றவர்களோடு இதனை ஒப்பிடாதீர்கள். ஏனென்றால் நீங்கள் அப்படிச் செய்வீர்களானால், நீங்கள் உங்கள் அவதானத்தை இழப்பதுடன் உங்கள் பாதையிலிருந்து தவறி விடுவீர்கள்.

உலகிலே மிக வேகமான ஓட்டவீரன் உசையின் போல்ட் தன்னுடைய ஓட்டத்தை மொபாராவினுடைய ஓட்டத்தோடு ஒப்பிட முயற்சிக்கிறார் என்று சிறுது நேரத்திற்கு சிந்தனை செய்து கொள்ளுங்கள். லண்டன் ஒலிம்பிக்கை நீங்கள் இன்னும் உங்கள் நினைவிலிருந்து இழந்திருக்க மாட்டீர்கள் என நினைக்கிறேன். இவர்கள் இருவரும் தங்களுடைய 100 மீட்டர், 10,000 மீட்டர் ஓட்டங்களை 9.58 செக்கனிலும், 29.37 நிமிடத்திலும் நிறைவு செய்தார்கள். அவர்கள் தங்களுடைய பிரிவிலே செய்யக்கூடிய உயரிய காரியத்தைச் செய்தார்கள். அதைப்போலவே, மற்றவர்களோடு ஒப்பிடுவதை நிறுத்திவிட்டு, இன்று எமது ஓட்டத்தை ஓட ஆரம்பிப்போம்!

## 2. ஓட்டப்பந்தயத்தில் உங்கள் அவதானம்

இயேசுவை நோக்கியே உங்கள் அவதானம் எப்போதும் இருக்கவேண்டும்!

> *அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். எபிரேயர் 12:2*

இயேசுவே எமது விசுவாசத்தின் ஆரம்பமும் முடிவுமானவர், எனவே எமது கண்களை எப்போதும் அவர்மீது பதியவைப்பது அவசியமானது. எமது அவதானமானது இயேசுவை விட்டு தவறும்போது நாம் தடுமாறிவிடுவதோடு உற்சாகத்தை இழக்கிறோம்.

எமது வாழ்க்கையின் ஒவ்வொரு நாளிலும் இயேசுவை உதாரத்துவமாய் கொண்டு நாம் இந்த ஓட்டத்தை ஓட வேண்டியவர்களாக இருக்கிறோம். அவருடைய சாந்தமான, கீழ்ப்படிவுள்ள, தாழ்மையான, அன்பான, ஆத்துமாக்களை குறித்த உற்சாகமுள்ள, சுய நிராகரிப்பான, பரிசுத்தமான, விசுவாசமான, பொறுமையான, ஜெபம் நிறைந்ததான குணாதிசயங்களை பிரதி செய்பவர்களாக நாம் திகழவேண்டும். ஒவ்வொரு நாளும் அவரைப்போன்றவர்களாக மாறுகிறதில் வளர்ச்சியானவர்களாக காணப்படுவோம்.

> ''*நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.''* 2 கொரிந்தியர் 3:18

''இயேசுவையே நோக்கி பாருங்கள்'' என்ற வார்த்தையை நினைவில் கொள்ளுங்கள். இயேசுவை மாத்திரம் நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்த போது, பேதுரு தன்னுடைய படகிலிருந்து வெளியேறி கடல் தண்ணீரிலே தன்னுடைய நடையை நன்றாய் ஆரம்பித்தார். முழு அவதானமும் இயேசுவையே நோக்கி இருந்த போது அப்படியாய் நடந்தார். ஆனால் அவருடைய அவதானம் மாறியபோது, தன்னுடைய நிலையை இழந்தவராக நீரிலே மூழ்க ஆரம்பித்தார். ஆகவே, இயேசுவை நோக்கியவர்களாக ஓடுங்கள்.

மேலும், இங்கே நாம் யாரோடும் போட்டியிடத் தேவையில்லை. நாம் கிறிஸ்தவர்களாக எல்லோரும் ஒரே குழுவைச் சேர்ந்தவர்கள்! நாம் சக சகோதரர்களோடு அல்லது மற்றைய சபைகளோடு போட்டியிடுவதற்காக இங்கே காணப்படவில்லை. இயேசுவுக்காக ஓடி, அவர் திட்டமிட்டப்படி, அவர் கொடுத்த முழு ஆற்றலோடு ஓட்டத்தை முடிப்பதே எமது வேலையாயிருக்கிறது.

## 3. இடைவிடா முயற்சியோடு பொறுமையோடு ஓடுங்கள்.

இந்த ஓட்டத்தில், நீங்கள் பிரச்சனைகள் தடைகளால் கட்டப்பட்டிருப்பினும் நீங்கள் தொடர்ந்து ஓடுகிறவர்களாக இருக்க வேண்டும்.

> ''*அவர் **தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு**, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான*

*விபரீதங்களைச் **சகித்த** அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்.”* எபிரேயர் 12:2-3

இயேசு இந்த பூமியிலே இருந்தபோது, அவருடைய வாழ்க்கையில் அவர் கடந்தபோன காரியங்களை திடீர் புகைப்படம் போன்று சுருக்கி உங்களுக்கு காண்பிக்கிறேன். உங்கள் வாழ்க்கையோடு சிந்தித்துப் பாருங்கள்.

- கன்னித்தாயிடம் பிறந்தார் - மத்தேயு 1:18-19
- தொழுவத்திலே பிறந்தார் - லூக்கா 2:7
- ஏழை பெற்றோர்களுக்கு பிள்ளையாய் பிறந்தார் - லூக்கா 2:24
- அவர் குழந்தையாய் இருந்தபோதே அவருடைய வாழ்க்கைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது – மத்தேயு 2:13
- அவருடைய பிறப்பினிமித்தம் வேதனையான கலவரம் உண்டானது– மத்தேயு 2:16
- அவர் குழந்தையாய் இருந்தபோது வேறு இடத்திற்கு மாறவேண்டியதாயிருந்தது – மத்தேயு 2:13
- வெட்கக்கேடான நகரத்திலிருந்து அவர் எழுந்தருளினார் - நாசரேத்து லூக்கா 2:39
- அவருடைய தகப்பன் அவர் வாலிபமாய் இருந்தபோது மரித்துப்போனார். மத்தேயு 13:53-58
- அவர் தன் குடும்பத்தை தாங்கவேண்டியவரானார் - மத்தேயு 13:55-58
- அவருக்கு தலைசாய்க்கவும் இடமோ வீடோ இருக்கவில்லை. மத்தேயு 8:20, லூக்கா 9:58
- அவர் மற்றவர்களால் வெறுக்கப்பட்டவராகவும், எதிர்க்கப்பட்டவருமாய் இருந்தார். மாற்கு 14:1-2
- அவர் மதிமயங்கியவர் என மற்றவர்களால் குற்றஞ்சாட்டப்பட்டார். – மாற்கு 3:21
- அவர் பிசாசுகளின் தலைவன் என குற்றஞ்சாட்டப்பட்டார் - மாற்கு 3:22
- அவர் தன் சொந்த குடும்பத்தார்களால் எதிர்க்கப்பட்டார் - மாற்கு 3:21-22
- அவர் அவர் பேசுவதைக் கேட்க வந்த மக்களால் எதிர்க்கப்பட்டு, வெறுக்கப்பட்டு, மறுதலிக்கப்பட்டார். மத்தேயு 13:53-58, லூக்கா 4:28-29
- அவருடைய நெருங்கிய நண்பனால் காட்டிக்கொடுக்கப்பட்டார் - மாற்கு 14:10-11,18
- அவர் தனித்துவிடப்பட்டார். அவருடைய எல்லா நண்பர்களாலும் மறுதலிக்கப்பட்டு மறக்கப்பட்டார். – மாற்கு 14:50

- அவர் தேசத்தில் நீதி விசாரிப்போரால் தேசத்துரோகி என அழைக்கப்பட்டார். யோவான்18:33
- அவர் சிலுவை மரணத்தை பெறுமளவு பொதுவான சட்டத்தை மீறுகிறவனாக தண்டனைக் குரியவராக்கப்பட்டார். யோவான் 19:16

நீங்கள் இந்தளவில் வருந்தியிருக்கிறீர்களா? நிச்சயமாக இல்லை! எனவே தான் நாம் சோர்வடையும்போது எமது வருத்தங்களை அவரோடு ஒப்பிட்டுபார்க்கவேண்டும் எனச் சொல்லப்படுகிறோம். நாம் இரட்சிப்படைய வேண்டுமென்பதற்காக அவர் கடைசிபரியந்தமும் சகித்தார். அவர் நமக்கு முன் உதாரணமாய் நிற்கிறார். ஆகவே, நாம் எமக்கு முன்பாக இருக்கும் ஓட்டத்தை பொறுமையோடு ஓடக்கடவோம்! பாருங்கள், இயேசு ஏற்கனவே அந்த ஓட்டப்பாதையில் இருப்பதால் அவரால் நமக்கு ஓடுவதற்கு உதவி செய்ய முடிகிறது – எபிரேயர் 4:15

அப்போஸ்தலராகிய பேதுரு எமது கிறிஸ்தவ ஓட்டத்தில் நாம் இயேசுவின் மீது அவதானத்தை கொண்டிருக்க வேண்டியதன் அவசியத்தை கூறி நம்மை தைரியப்படுத்தி தேற்றுகிறார்:

> *‘‘கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு* ***<u>அழைத்தவராயிருக்கிற</u>*** *சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவராக.’’* 1 பேதுரு 5:10

இதினிமித்தமே கிறிஸ்துவின் சரீரத்தில் பங்குள்ளவர்களாக நாம் ஒருவரையொருவர் சந்திப்பது முக்கியமாகின்றது. எனவே, நாம் எமது ஓட்டத்தில் தடைகள், பிரச்சனைகள் வரும்போது ஒருவரையொருவர் தேற்றி உதவிசெய்பவர்களாய் இருக்கலாம்.

> *‘‘மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து: சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திச்சொல்லக்கடவோம். நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய் புத்திசொல்லக்கடவோம்.’’*
> எபிரேயர் 10:24-25

## 4. உங்களை தாமதப்படுத்துகிற எல்லாப் பாரங்களையும் ஒருபுறம் வைத்துவிடுங்கள்.

> *‘‘ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்.’’* எபிரேயர் 12:1

மரதன் ஓட்டத்தில் பங்குபற்றும் ஒருவர் டை அணிந்து, சாதாரண சப்பாத்துக்களை போட்டுக்கொண்டு, முதுகிலே ஒரு பையையும் மாட்டிக்கொண்டு ஓட்டத்தை ஓடுவதை எப்போதாவது நீங்கள் கண்டிருக்கிறீர்களா? அது எவ்வளவு கடினமானது என கற்பனை செய்துப்பாருங்கள். இதைப்போன்று தான் இன்று அநேக கிறிஸ்தவர்கள் அவர்களுடைய பாவங்களினிமித்தம் நல்ல, சுகாதாரமான வாழ்க்கையை வாழ முடியாதுள்ளனர். எமது ஆத்துமாவை பாதிக்கும் எதையும் நாம் எறிய வேண்டியது அவசியமாகிறது. பாவத்தைக் குறித்ததான பட்டியலை சீஷத்துவ பாடத்திலே முன்பு பார்த்திருக்கிறோம். உங்களால் இப்படிப்பட்ட மெதுவாக துவங்குகிறதான பாவங்களை நீக்கிவிட முடியுமா?

> *‘‘பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம். ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன். ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன்.’’* 1 கொரிந்தியர் 9:25-26

### சுய கட்டுப்பாடு :

பரலோகத்தை நோக்கியதான பாதையில் நம்மை தடைபண்ணுகிறதான அனைத்தையும் நாம் புறக்கணிக்க வேண்டும். – மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை, ஐசுவரியத்தின் மீதான விருப்பம், ஆசைகள், கௌரவங்கள், கவனயீனத்தின் ஆவி, தேவனுக்கு விரோதமான அனைத்து காரியங்களையும் நாம் வேரோடு பிடுங்கியெறிய வேண்டும்.

ஓட்டப் போட்டியில் பங்குபற்றுவதை தொழிலாகக் கொண்ட ஒருவரிடம் நீங்கள் கேட்பீர்களானால் அவர் சரீரத்தை ஒழுங்கமைப்பாக வைத்திருப்பதன் முக்கியத்துவத்தை உங்களுக்குச் சொல்லுவார். விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுபவர்கள் அவர்களுடைய சரீரத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது அவசியம். அவர்கள் தங்கள்

சரீரங்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கக் கற்றுக்கொள்கிறார்கள். அப்போஸ்தலராகிய பவுலும் அவர் தன்னுடைய சரீரத்தை எப்படிக் கட்டுப்படுத்துகிறார் என்று கூறுவதோடு, நாம் நம்முடைய சரீரத்தின் அவயவங்களை, நாவு, ஆசைகள், கண்கள், எமது உணர்வுகள் போன்றவைகளை நாம் கட்டுப்படுத்தி ஒழுக்கத்திற்குள் பேண வேண்டுமென்று எச்சரிக்கிறார். யாரெனும் ஒருவர் வெற்றிக்கான தனது வழியின் ஒழுக்கத்தை வஞ்சித்துக் கொள்வாரானால் அவர் வெற்றியாளராக முடியாது. அவர் விளையாட்டை பிழையாக விளையாடியவராக கருதப்படுவார். அதைப்போன்று, தேவன் நமக்கு இந்த ஓட்டத்தை ஓட சில விதிமுறைகளை வைத்திருக்கிறார். யாரெல்லாம் அந்த விதிமுறைகளை பின்பற்றி தன் ஓட்டத்தை ஓடுகிறார்களோ அவர்கள் வெற்றியாளர்களாக கருதப்படுவார்கள்.

1 தீமோத்தேயு 4:7-16 இல் கூறப்பட்டுள்ள அந்த கட்டளைகளின் அல்லது விதிமுறைகளின் சுருக்கம்:

- தேவனுடைய கட்டளைப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள முதலாவது கட்டளையானது தேவனை நினைத்து தியானம் செய்வதை (தேவபக்தி) பயிற்சிசெய்து கொள்ளுங்கள்.
- இரண்டாவது கட்டளையானது ஜீவனுள்ள தேவன் மீது நம்பிக்கை வையுங்கள்.
- மூன்றாவது கட்டளையானது வார்த்தையில், நடத்தையில், அன்பில், விசுவாசத்தில், பரிசுத்தத்தில் விசுவாசிகளுக்கு முன்னுதாரணமாய் இருத்தல்.
- நான்காவது கட்டளையானது வேதாகமத்தை வாசிப்பதில் கவனம் செலுத்துதல். .
- ஐந்தாவது கட்டளையானது அவைகளை தியானம் செய்தல்.
- ஆறாவது கட்டளையானது அவைகளை பின்பற்றி நடத்தல்.

> *‘‘ஆகையால் நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக.’’* ரோமர் 6:12

உலகத்தையும் உலகத்திற்குரிய காரியங்களை வெறுக்கும்படி நமக்கு சொல்லப்பட்டிருக்கின்றது. 1 யோவான் 2 நிருபத்தில் நாம் இயேசுவைப் போல எப்படி இவ்வுலகில் வாழவேண்டுமென்று தெளிவாக வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

**5. அஞ்சலோட்டம் – ஒவ்வொருவருடைய வெற்றியும் உங்களுடைய ஓட்டத்தை நீங்கள் நிறைவு செய்வதில் தங்கியிருக்கிறது.**

அநேக புனிதர்கள் எமக்கு முன்பதாகவே தங்களுக்கு கொடுக்கப்பட்ட ஓட்டத்தை ஓடி நிறைவு செய்தவர்களாய் இருக்கிறார்கள். சிலர் தங்களுடைய வாழ்க்கையை, தாங்கள் நேசிப்பவர்களை இழந்தார்கள். சிலர் தங்கள் வாழ்நாள் முழுதும் வேதனைப்பட்டவர்களாய் துன்புறுத்தப்பட்டார்கள். சிலர் அவர்களுடைய விசுவாசத்தினிமித்தம் சித்திரவதைச் செய்யப்பட்டு கொலைசெய்யப்பட்டார்கள்.

எபிரேயர் 11 அதிகாரத்தை பாருங்கள். தங்களுடைய ஓட்டத்தை சிறப்பாய் முடித்த, ஆச்சரியமான வாழ்க்கை வாழ்ந்த விசுவாச வீரர்கள் பற்றி சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் நடுவில் 35வது வசனத்தில் கருத்தானது வேறொரு திசைக்கு மாற்றப்படுகிறது. தங்களுடைய விசுவாசத்தின் நிமித்தம் துன்புறுத்தப்பட்டு வாதிக்கப்பட்டவர்கள் பற்றி சொல்லப்படுகிறது.

> *‘‘ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள். வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்ப்பட்டார்கள்.’’* எபிரேயர் 11:35

தங்கள் விசுவாசத்தின் நிமித்தம் மேலான உயரிய காரியங்களை பெற்றுக்கொண்ட அல்லது அடைந்தவர்கள் பற்றியும் பின்பு அந்த பட்டியலானது சிலர் தங்கள் விசுவாசத்தின் நிமித்தம் இழந்தவைகள் குறித்தும் சொல்லப்பட்டிருப்பதை உங்களால் தெளிவாக பிரித்தறியக் கூடியதாயிருக்கிறது.

> *‘‘வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள். கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைப்பார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள். உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை. அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள். இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சிபெற்றும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள். ’’* எபிரேயர் 11:36-39

அவர்கள் தங்கள் ஓட்டத்தை சிறப்பாய் முடித்தபோதிலும் அவர்கள் வாக்குத்தத்தை பெற்றுக்கொள்ளவில்லை ஏன்?

> *''<u>அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்.</u> ஆகையால் நாம் கேட்டவை களைவிட்டு விலகாதபடிக்கு, அவைகள் மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டும். ஏனெனில், தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க, ''* எபிரேயர் 11:40 – 12:2

எபிரேயர் புத்தகமானது கடிதமாக எழுதப்பட்டிருக்கிறதேயன்றி அதிகாரங்களாக அல்ல. ஆனால் நாம் இதனை நமது வசதிக்காக அதிகாரங்களாக பிரித்திருக்கிறோம். ஆனால் இந்த அதிகாரம் பிழையான இடத்தில் பிரிக்கப்பட்டிருக்கிறது என்பதே என்னுடைய கருத்தாகும்.

நாம் எமது ஓட்டத்தை முடிக்கும் வரையிலும் அவர்கள் தங்களுடைய கிரீடத்தை பெற்றுக்கொள்ள முடியாது, தேவன் இதனை ஒரு அஞ்சலோட்டத்தைப் போலவே உத்தேசித்துள்ளார். உங்களில் எத்தனை பேர் 4*100 மீட்டர் ஓட்டப்போட்டியை கண்டிருக்கிறீர்கள்? முதலாவது நபர் பெடன் என ஆங்கிலத்தில் சொல்லப்படும் கைத்தடியை எடுத்துக்கொண்டு அடுத்து அதனை எடுத்துக்கொண்டு ஓடுபவர் இருக்கும் இடம் வரையிலும் ஓடுகிறார், இப்படியாக அஞ்சலோட்டத்தில் பங்குபற்றும் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வரையறை வரையிலும் கைத்தடியை எடுத்துக்கொண்டு முடிக்கும் இடம் வரையிலும் ஓட வேண்டும்.

நாம் வாழ்கிறதான கிறிஸ்தவ வாழ்க்கையும் இதனைப் போன்றதாகும். நூம் நம்முடைய ஓட்டத்தை நிறைவு செய்வது மாத்திரம் முக்கியமானதல்ல, அதைப்போன்றே நம்முடைய கைத்தடியை (பெடன்) அடுத்த தலைமுறைக்கு கொடுப்பது முக்கியமானதாகும். துங்களுடைய விசுவாசத்தை அடுத்த தலைமுறைக்கு வழங்கி, அவர்களை தங்களுடைய ஓட்டத்தை நன்றாய் ஓடுவதற்கு உற்சாகப்படுத்துவது ஒவ்வொரு பெற்றோரதும் பொறுப்பாகும்.

மேலும், நாம் முன்பு பார்த்ததைப்போன்று எமக்கு முன்பதாக தங்களுடைய ஓட்டத்தை நன்றாய் ஓடியவர்கள் நமது ஓட்டத்தை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். உங்களால் அதனை சிந்தனைக் கண்ணில் பார்க்கக்கூடியதாக உள்ளதா? எமக்கு முன்பதாக ஓடிய தேவனுடைய மனிதர்கள் எமக்கு சாட்சிகளாய் இருப்பதோடு, அவர்களைப் போன்று நாமும் ஓடுவதற்கு நம்மை உற்சாகப் படுத்துகிறார்கள்.

பவுல் இதனை இங்கே அழகாக குறிப்பிடுகிறார்.

> *‘‘நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றிலும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன். சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை: ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்.’’* பிலிப்பியர் 3:12-14

‘‘உங்கள் களைத்த கரங்களை உயர்த்துங்கள், பின்பு, நடுக்கத்துடனான உங்கள் முழங்கால்களை பெலப்படுத்துங்கள்! நேரான வழியில் நடவுங்கள். உங்கள் முடமான பாதங்கள் ஊனமாய் இராது நொடியில் சுகப்படும்.’’